www.tamilarangam.net

# இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் சில முக்கிய குறிப்புக்கள்

1. **வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைந்த மாகாணசபையின்கீழ் பொலீஸ், இராணுவம்**

இந்திய-இலங்கை ஒப்பந்தப்படி (பக்கம் 8, 2.10) கொழும்பு அரசின் கைகளில்தான் பொலீஸ், இராணுவம் என்பன இயங்க உள்ளன. விடுதலைப் போராளிகள் நிராயுதபாணிகள் ஆக்கப்பட்டு, தமிழ் பிரதேசங்களில் பொலீஸ் படையென்ற போர்வையில் பொலீஸ் கொமாண்டோக்களும், பாசிச சிங்கள ஊர்காவற்படையினரும் நிலைநிறுத்தப்பட்டும், இராணுவம் தொடர்ந்தும் நிலைகொண்டிருக்கும் நிலையிலும், இந்திய சமாதானப்படை (?) வெளியேறியபின்னர் பழைய அரசயந்திரங்கள் தமது வழமையான இனவாத பயங்கரவாதத்தை ஆரம்பித்தால், இந்தியப் பிரதர் ராஜீவ் காந்தி எச்சரிக்கைவிடுவதுடன், அனுதாபமுமே தெரிவிக்கமுடியும். தமிழக மக்கள் தமிழகத்தில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் மாத்திரமே நடாத்தமுடியும்.

2. **ஊர்காவற்படை என்னும் ஆயுதம் தரித்த சிங்களக் காடையர்களின் நிலையும், பாசிசப் படையான பொலீஸ் கொமாண்டோக்களின் நிலையும்**

கிழக்கு மாகாணத்தில் தமிழ்பேசும் மக்கள்மீது பயங்கரவாதத்தினை கட்டவிழ்த்து வரும் பொலீஸ் கொமாண்டோக்களும், சிங்கள ஊர்காவற்படைகளும் ஆயுதபாணிகளாக விடப்பட இருப்பதுடன், இப்பாசிசப் படைகள் சிறீ லங்க பொலீஸ் படைகளிலும், ஏனைய படைகளிலும் அனுமதிக்கப்பட உள்ளன. (பக்கம் 9 இன் கடைசிப்பந்தியையும், பக்கம் 10 இன் முதற் பந்தியையும் இந்திய சிறீ லங்க ஒப்பந்தத்தில் பார்க்கவும்)

இங்கு அவதானிக்கவேண்டியது என்னவென்றால், தமிழ் விடுதலைப் போராளிகள் நிராயுதபாணிகள் ஆக்கப்படும் அதே வேளையில், சிங்கள ஊர்காவற் படையினர் ஆயுதபாணிகளாகவே விடப்படுகின்றனர்.

3. **தமிழ் மொழியின் அந்தஸ்து**

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் தமிழ் மொழிக்கு சிங்கள மொழியுடன் சமனை அந்தஸ்து கொடுக்கப்படவில்லை என்றே கூறவேண்டும். ஒப்பந்தத்தில், "சிங்கள மொழி சிறீ லங்காவின் அரச மொழி" என்றும் " தமிழும், ஆங்கிலமும் அரச மொழிகளாக இருக்கும்" என ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது. பக்கம் 9 இல் 2.18 இனைப்பார்க்கவும்.

இங்கு அவதானிக்கவேண்டியது என்னவென்றால் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் "சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்பவை அரச மொழியாக இருக்கும்" என எழுதப்படவில்லை.

4. **மாகாண சபைத் தேர்தல்கள்**

வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்ட (போலியாக) மாகாணசபைத் தேர்தல்கள் 1987 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முதல் நடைபெறும் என ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பக்கம் 7 இல் 2.8 இனைப்பாாக்கவும்.
பல லட்சம் தமிழ் பேசும் மக்கள் வீடுகளில் இருந்தும், கிராமங்களில் இருந்தும் கலைக்கப்பட்டு, அகதிகளாக தமிழீழத்திலும், தமிழகத்திலும், வெளிநாடுகளிலும் தஞ்சமடைந்த நிலையில், இவர்கள் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் சரியாக ஏற்படுத்தப்படாத நிலையில், இவ்வருடம் நடாத்தப்படவிருக்கும் தேர்தல்கள் தமிழ் பேசும் மக்களின் கருத்துக்களை சரியாக பிரதிபலிக்கமாட்டாது.

5. **கிழக்குமாகாண கருத்து வாக்கெடுப்பு**

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் வடக்கும், கிழக்கும் இணைக்கப்பட்டு ஒரு மாகாணம் எனவும், இவை ஒரு மாகாண சபையாக அமையும் எனவும் குறிப்பிட்ட அதே வேளையில் கிழக்கு மாகாணத்தில் 1988 ஆம் ஆண்டில் கருத்து வாக்கெடுப்பு எடுக்கப்படும் என நிபந்தனை விதிக்கப்படுவது அடிப்படையில் வடக்கு, கிழக்கு இணைப்பையே நிராகரிக்கிறது. இந்தவிதமான கருத்து வாக்கெடுப்பினை இந்திய, சிறீ லங்க அரசுகள் நிபந்தனையாக ஒப்பந்தத்தில் வைப்பது அடிப்படையில் ஜனநாயகமற்ற ஒரு செயற்பாடு மாத்திரமின்றி, இந்திய மத்திய அரசினதும், சிறீ லங்க அரசினதும் போலித்தன்மையை அப்பட்டமாக காட்டுகிறது. இதனை இந்திய மத்திய அரசு ஏற்குமாயின், பஞ்சாப் மாநிலத்தில் கருத்து வாக்கெடுப்பை நடாத்த இந்திய மத்திய அரசு ஏற்குமா ? அல்லது, இலங்கைத் தீவில் வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ் பேசும் மக்களின் கருத்துக்களை வாக்கெடுப்பு மூலம் கிழக்கில் நடாத்த இருப்பதுபோல் நடாத்த மறுத்துவந்ததுடன், சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகளையே வழங்கமறுத்துவரும் சிங்களப் பாசிசவாதிகள், இன்று கிழக்கில் வாழும் "சிறுபான்மையினர்" என அவர்களால் கருதப்படுபவர்களது உரிமைகள் பற்றியும் ஜனநாயகம் பற்றியும் கூக்குரல் இடுவது உண்மையில் பெரும் போலி நாடகமும், கேலிக்கூத்துமே.

. . . . . . . . . . . . . . . . . . . . .

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்